பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 29 திங்கட்கிழமை 12.05.2025 கதிர் 184

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்கும் இடையில் நேற்று ஒருபேச்சு இடம்பெற்றது. உள்ளாட்சி சபைகளில் தேர்தலுக்குப் ☞ 2

## தமிழீழத்தை தாங்கி நிற்கும் கைகள் தமிழின அழிப்பு நினைவகம் திறப்பு

### கனடாவின் பிரம்டன் நகரில்

தமிழின அழிப்பு நினைவகம் மே 10 கனடாவின் பிரம்டன் நகரில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் நடத்தப்பட்ட தமிழின அழிப்பில் உயிரிழந்தவர்களின் நினைவாகஇந்நினைவகம் கட்டப்பட்டுள்ளது. இரு கைகள் தமிழீழ வரைபடத்தைத் தாங்கிப் பிடித்திருப்பதாகஇந்தநினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வரலாற்றினையும், அவர்களின் துயர்சுமந்த நினைவின் கதைகளையும் எதிர்காலத் தலைமுறையினரால் நினைவுகூரப்படுவதை உறுதிசெய்யும் ஒரு ☞ 2

## உள்ளாட்சி தேர்தல் ஆளும்தரப்புக்கு மக்கள் விடுத்த சிவப்பு எச்சரிக்கை

உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகள் மூலம் மக்கள் ஆளும்தரப்புக்குச் சிவப்பு எச்சரிக்கை விடுத்திருக் கின்றனர். அதனால் மக்களின் எச்சரிகையை புரிந்துகொண்டு ஆளும்தரப்பு மக்களுக்குஅளித்தவாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வர வேண்டும் என முன்னிலை சோசலி கட்சியின் செயலாளர் குமார் குணரத்னம் தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுசெய்தியாளர்களிடம் பேசிய போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றதேர்தல்தேசியமக்கள்சக்திக்கு நாட்டு மக்கள் சிவப்பு எச்சரிக்கை ஒன்றை

விடு

மத்திருக்கிறது. இந்தத் தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் எதுவும் இடம்பெறப் போவதில்லை. அதனால்கிடைக்கப்பெற்றசந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு ஆளும்தரப்பின் நடவடிக்கை தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை ஒன்றை மக்கள் வழங்க வேண்டும் என்றே போராட்ட அணியாகத் தெரிவித்து வந்தோம். தேர்தல் பெறுபேறுகளை பார்க்கும்போது மக்கள் எமது கோரிக்கைக்கு ஓரளவு செவிவாய்த்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆளும்தரப்புக் கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் தெரிவித்த விடயங்களை மறந்து புதிய தாராளவாதக் கொள்கையில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது. மக்கள்எதிர்கொண்டுள்ள வரிச்சுமையைக்குறைப்பதாகத்தெரிவித்தவாக்குறுதியை மறந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை மேலும் அதிகரித்துள்ளது. பாடசாலை உபகரணங்கள் மற்றும் சுகாதார உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரி ஒரு சதமேனும் குறையவில்லை.

மக்கள் விராதேமாக நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை இந்தியாவுக்கு காட்டிக்கொடுக்கும் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தங்களை இதுவரை நாட்டுக்கு வெளிப்படுத்தவில்லை.

இவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் கடுமையாக எதிர்த்து வந்த அரச அடக்குமுறையை இன்று போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து வருகின்றனர். இவ்வாறான நிலமையிலே இந்தத் தேர்தல் இடம்பெற்றது. தேசிய மக்கள் சக்தி சகோதரர்கள் தேர்தல் மேடைகளில் கடந்த ஆளும்தரப்புகளுக்கு எதிராக மேற்கொண்டுவந்த கடும் எதிர்ப்பு மற்றும் அரசியல் விமர்சனத்துடனே மக்கள் அவர்களின் பால் அணி திரண்டனர். என்றாலும் இடம்பெற்று முடிந்த தேர்தல் பெறுபேறுகளை பார்க்கும்போது ☞ 2

# முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் இன்று தொடக்கம்

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமானதுமேஇன்றுதொடங்குகிறது. மே18வரைநாடுமுழுவதும்இடம்பெறும். முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவது இதில் முன்மை இடத்தைப் பிடிக்கும்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் அனைத்து பொதுமக்களும் இந்நிகழ்வினை உணர்வுபூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கச் செயலாளரும் அம்பாறை மாவட்டவலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவவியுமாகிய தம்பிராசா செல்வராணி ☞ 2

## மின்சார கட்டண அதிகரிப்பு அடுத்த வாரம் முன்வைப்பு

மின்கட்டணதிருத்தம்தொடர்பானமுன்மொழிவை இலங்கை மின்சார சபை எதிர்வரும் வாரம் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கவுள்ளது.

வருடாந்த மின்கட்டண திருத்தத்துக்கு அமைய எதிர்வரும் ஜூன் மாதம் மின்கட்டண திருத்தம் தொடர்பில் ஆராயப்படும். இம்முறை மின்கட்டணம் குறைந்த சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மின்னுற்பத்திக்குச் செலவாகும் தொகை மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மின்கட்டணம் தீர்மானிக்கப்படவேண்டும். ஆகவே மின்கட்டணம் தொடர்பில் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் மின்கட்டண திருத்த நிர்ணய முறைமையை அமுல்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஐந்தாம் தவணை விடுவிப்புக்கு மின்கட்டண திருத்த ☞ 8

## மின் கட்டண உயர்வை உடன் நிறுத்த வேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

எதிர்வரும் மின்சாரக் கட்டண திருத்தத்தில் 25% முதல் 30 % வரையான அளவில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த ஆளும்தரப்பு மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன், இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை மறுபரிசீலனை செய்வதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, முந்தைய ஆளும்தரப்பு சர்வதேசநாணய நிதியத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை அப்படியேசெயல்படுத்துவதன்விளைவாக ☞ 8

## கொத்மலை பஸ் விபத்தில் உயிரிழப்பு 23ஆக உயர்வு

நுவரெலியா - கம்பளை பிரதான வீதியின் கொத்மலை - கெரண்டிஎல்ல பகுதியில்நேற்றுஅதிகாலைபஸ்ஸொன்று பள்ளத்தில்வீழ்ந்துவிபத்திற்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்துள்ளது.

விபத்தில் 50-இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ☞ 8

## ரூ. 10 லட்சம் இழப்பீடு

கொத்மலை - கெரண்டிஎல்ல பஸ் விபத்தில் உயிரிழந்த நபரொருவருக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதி நிதியத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதனடிப்படையில்,உயிரிழந்தவரின் உறவினர்களுக்கு இந்த பணத்தை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது. ☞ 8

## பதவிகளைப் பிடிப்பதே தமிழ் அரசின் நோக்கம்

### கஜேந்திரகுமார் விமர்சனம்

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரைகிடைத்துள்ளமக்கள்ஆணையை சபைகளில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கானதாகவே பார்க்கின்றது. தேர்தலுக்காகவேதான் தமிழ்த்தேசியம்பேசுகின்றார்கள். தேர்தல் நிறைவடைந்து அடுத்த ☞ 2

## இந்திய– பாக் போர் நிறுத்தத்திற்கு ஜனாதிபதி அநுர பெரும் வரவேற்பு

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் எட்டப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் வரவேற்று இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த தீர்மானமானது இரு தரப்பிலும் அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு முக்கியமான ஒப்பந்தம்மட்டுமல்ல,நிலையானஅமைதி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைவதற்கான முதல் மற்றும் முக்கிய படியாகும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

ஒரு பேரழிவு ஏற்படுவதற்கு முன்பாகவே, இந்தியா மற்றும் பாகிஸ்தான்தலைவர்கள்நெருக்கடியைத் தீர்க்க தோட்டாக்களுக்குப் பதிலாக வார்த்தைகளைப் பயன்படுத்த முடிவு செய்து தங்கள் மதிநுட்பத்தையும், இராஜதந்திரத் திறமையையும் வெளிப்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானின் நெருங்கிய அண்டை நாடு மற்றும் நட்பு நாடு என்ற ரீதியில் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு காண்பதற்கான ஒரு முக்கிய படியாக இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் இருக்கும் என்று இலங்கை நம்புவதாகவும் ☞ 8

## அன்னையத் தினத்தில் தேவதையான தாயார்

### அனைவரையும் உலக்கிய அன்னையின் தியாகம்



அன்னையர் தினமான நேற்று தனது உயரைக் கொடுத்துத் தனது குழந்தையைசிறுகாயம்கூட இன்றிக் காப்பாற்றிய தாயின் உயிரிழப்பு இலங்கை முழுவதையும் உலுக்கியுள்ளது. அன்னை எனும் தேவதை என்கிற கருத்தில், அவர் தனது ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பின்னரான நிலையை எப்படிக் கையாள்வது என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரனைச் சந்தித்துப் பேச நேரம் கேட்டு சித்தார்த்தன் அழைப்பெடுத்தார். ஆனால் நேரம் ஒதுக்குமளவிற்கு சுமந்திரனுக்கு இடைவெளி இருக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றசபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பான விடயங்களில் மும்முரமாகப் பணியாற்றி வரும் அவர், வெற்றிபெற்ற சபைகளின் உறுப்பினர்களை நேரில் சந்தித்துப் பேசுவதில் குறியாக இருந்தார். மானிப்பாய் மற்றும் சுன்னாகத்தில் இந்தச் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு புறப்படும் நேரத்தில் சித்தார்த்தனின் அழைப்பு வந்ததால், தன அவரை வந்து நேரில் சந்திப்பார் என்று தெரிவித்த சுமந்திரன், அடுத்து வலி. வடக்கு பிரதேச சபையினரைச் சந்திக்கச் செல்லும் வழியில் சித்தார்த்தன் வீட்டிற்குச் சென்றார்.

அங்கு, ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சமத்துவக் கட்சித் தலைவர் சந்திரகுமார் ஆகியோரும் உடனிருந்தனர். அந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் மட்டும் 'மிஸ்ஸிங்'.

பேச்சின்போது தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டை சுமந்திரன் எடுத்துச் சொன்னார். சபைகளில் எந்தக் கட்சி முன்னிலை பெற்றிருக்கின்றதோ அந்தக் கட்சி ஆட்சியமைப்பதற்கு வழிவிட்டு மற்றைய தமிழ்க் கட்சிகள் ஆதரவளிக்கவேண்டும் என்பதுதான் கட்சியின் நிலைப்பாடு என்று தெரிவித்தார். மற்றைய தலைவர்கள் அதனை ஏற்றுக்கொண்டனர். தமிழ் அரசுக் கட்சியின் அந்த நிலைப்பாட்டில் தமக்கு முழு உடன்பாடுதான் என்றும் தெரிவித்தனர். இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் வவுனியாவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைக்க தமிழ் அரசுக் கட்சி முழு ஆதரவு தரும் என்றும் சுமந்திரன் தெரிவித்தார். அதனையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதில் கொள்கை, கோட்பாட்டு விவகாரங்களையோ, அரசியல் தீர்வு விவகாரத்தையோ போட்டுக் குழப்பிக் கொள்வதில்லை என்பதிலும் தலைவர்கள் உறுதியாக இருந்தனர். தமது கட்சியின் நிலைப்பாட்டின் அடிப்படையில் வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் தமது கட்சி அப்படியே செயற்படும் என்பதை சுமந்திரன் தெளிவுபடுத்தினார். அதாவது கிழக்கில் இரு சபைகளில் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவுடன், அதாவது முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவுடன் தமது கட்சி ஆட்சியமைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது யதார்த்தமான அணுகுமுறை என்று மற்றைய தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். அதேநேரம், உள்ளூராட்சி சபைகளில் இவ்வாறு பிரிந்து நின்று வாக்குகளைப் பெற்றாலும் நாடாளுமன்றத் தேர்தலில் அப்படிப் பிரிந்து நிற்காமல் சேர்ந்தே கேட்பதுதான் பயனுள்ளது, அதிக ஆசனங்களைப் பெறுவதற்கான வழி என்பதைப் பற்றியும் சுமந்திரன் விளக்கினார். அதனையும் மற்றவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதனடிப்படையில் மீண்டும் கூட்டமைப்பாக தேர்தல்களை எதிர்கொள்வதற்கு இந்தச் சந்திப்பில் அடித்தளமிடப்பட்டதாகச் செய்திகள் உலாவத் தொடங்கின. ஆனால், அப்படியெதுவும் இடம்பெறவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலில் சேர்ந்து போட்டியிடுவதன் நன்மைகள் பற்றிப் பேசப்பட்டதேயொழிய மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்படுவதற்கான எந்த அடித்தளமும் போடப்படவில்லை. மாகாண சபைத் தேர்தல் வரவுள்ள நிலையில், அதிலும் கூட்டாகப் போட்டியிட்டால் கிடைக்கக்கூடிய நன்மைகள் குறித்து அங்கு சுட்டிக்காட்டப்பட்டதே தவிர, கூட்டணி குறித்தோ அல்லது மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுவது குறித்தோ எதுவும் பேசப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடிந்தது.

கடந்த இரு தேர்தல்களாகத் தமிழ் மக்களின் தனிப் பெரும் கட்சியாக வளர்ச்சியடைந்துவரும் தமிழ் அரசுக் கட்சி, மீண்டும் கூட்டமைப்பு என்ற சுழலுக்குள் சிக்கிக்கொண்டு சின்னாபின்னமாகிப் போகாமல் நிதானமாக நடந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். மாகாண சபைத் தேர்தலின்போது ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கான அரசியல் கூட்டுக்கள் வைப்பதற்குஇடமுண்டானாலும் அதுகுறித்தும் அந்தக் கட்சி தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மே12 முதல் மே18 வரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரமாகும். வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அனைத்து பொதுமக்களும் இந்நிகழ்வினை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணையவேண்டும்.

இந்நிகழ்வானது 2009ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்று முடிந்த போர் காரணமாக ஓர் இனம் அழிக்கப்பட்டதன் ஞாபகார்த்தமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இரத்த ஆறு ஓடிய நாளாகவும் நினைவில் நிற்கிறது. இந்த வாரத்தில் 16 வருட காலமாக வலிகளைசுமந்து எங்களது உறவுகளுக்கான நீதி கிடைக்காமல் இன்றுவரை நாங்கள் வீதிகளில் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். எங்களுக்கான உரிய நீதி கிடைக்கும்வரை இந்தப் போராட்டத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று நீதியை பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் போர்க் காலத்தில் இலங்கை அரசு பொருளாதாரத் தடையை விதித்து ஒரு உணவுகூட அப்பகுதிக்குள் எடுத்துசெல்ல முடியாதவகையில் தடை விதித்தது. அந்தக் காலகட்டத்தில் அங்கு பட்டினி சாவு ஏற்பட்டது. ஆனால் எமது உறவுகள் உப்பில்லாத அரிசியை உபயோகித்து நீரை ஊற்றி அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக கஞ்சி தயாரித்தனர். அதுதான் முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும். அன்று முள்ளிவாய்க்காலில் அக்கஞ்சிக்கு வரிசையில் நின்று கொண்டிருக்கின்ற வேளையில் எத்தனையோ செல் தாக்குதல்கள் விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் கஞ்சி சிரட்டையுடன் உறவுகள் அவ்விடத்தில் உயிரிழந்தார்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் இந்த வலி தெரியும் எனவும் தனது தாயும் பிள்ளையைத் தொலைத்து விட்டு கண்ணீர் வடித்த காலமுண்டு எனவும் கூறியே இன்று ஆட்சிக்கு வந்திருக்கிறார். ஆனால் இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம் என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை.

எங்களுக்கு அவர் குறித்து தெரியும். கடந்த காலங்களில் எத்தனை ஜனாதிபதிகளை நாங்கள் கடந்து வந்திருக்கின்றோம். எத்தனை ஆளும்தரப்புக்களைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால் எங்களுக்கு எந்த விதமான ஒரு பதிலும் கிடைக்கவில்லை. எமக்கு எந்தவிதமான ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அதன் பிற்பாடு தான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம். அது மட்டுமல்ல மீண்டும் ஓ.எம்.பி.ஐ எங்களிடம் முன்வைக்கிறார்கள்.

இந்த உள்ளக பொறிமுறை வேண்டாம் எனக் கூறியும் இவ்வாறு அவர்கள் செயற்படுகின்றார்கள். நாங்கள் இன்று சர்வதேச பொறிமுறையை நாடி இருக்கின்றோம் -என்றார்.

## பதவிகளைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நொடியே தேசியம் கைவிடப்பட்டுவிட்டது. ஆட்சி அதிகாரம், ஆசன எண்ணிக்கைகள், சபைகளை கைப்பற்றுதல், மேயர், தவிசாளர், பிரதி தவிசாளர் போன்ற பதவிகளை கைப்பற்றுவதுதான் முழு நோக்கமாக இருக்கின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழக்கம்போல விமர்சித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற தமது கட்சி உறுப்பினர்களை நேற்றையதினம் கிறஸ்தவ வாலிபர் விடுதியில் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் பின்னரான சூழலில் தமிழ்த் தேசியத்திலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்படுகின்றார்கள் என்றொரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்ட சூழலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஆணையை வழங்கியுள்ளார்கள்.

நாடாளுமன்றம் உள்ளிட்ட தேசிய தேர்தல்களில் மக்கள் கொள்கைக்காக வாக்களிப்பார்கள். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் கட்சிகளின் கொள்கைகளை பார்த்து மக்கள் வாக்களிப்பது குறைவாகும். தொகுதியில் செயற்பட்டவர்கள், உறவினர்கள் என்ற அடிப்படையில் தான் வாக்குகளை வழங்குவார்கள்.

ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொள்கையை வெளிப்படுத்துவதென்பது மிகவும் சவலான விடயமாகும். ஆனால் எமது மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்துடன்தான் தாங்கள் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த வெளிப்பாடானது தமிழர் தேசத்தை எவராலும் அழிக்க முடியாது என்ற உண்மையை உணர்த்தியுள்ளது.

தமிழர் தாயகம் முழுவதும் மக்கள் தேச உணர்வை வெளிப்படுத்துவதற்காக தங்களுடைய வாக்குகளை அளித்துள்ள நிலையில், அவர்கள் எந்தவொரு தரப்பினருக்கும் ஆணையை வழங்கவில்லை. இந்தச் செய்தியைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழத் தேசத்துக்காக மாபெரும் ஆணை வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழு கூடியதன் பின்னர் 35 சபைகளில் தாங்கள் முன்னிலையில் இருக்கின்றோம், அங்கு தாங்கள்தான் ஆட்சி அமைக்கவேண்டும் என்று தீர்மானித்துள்ளதாக ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில் கிடைத்துள்ள மக்கள் ஆணையை சபைகளில் ஆட்சிஅதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானதாகவே பார்க்கின்றார்கள். தேர்தலுக்காகவேதான் தமிழ்த் தேசியம் பேசுகின்றார்கள். தேர்தல் நிறைவடைந்து அடுத்த நொடியே தேசியம் கைவிடப்பட்டுவிட்டது.

ஆட்சி அதிகாரம், ஆசன எண்ணிக்கைகள், சபைகளை கைப்பற்றுதல், மேயர், தவிசாளர், பிரதி தவிசாளர் போன்ற பதவிகளை கைப்பற்றுவதுதான் முழு நோக்கமாக இருக்கின்றது. எம்மைப் பொறுத்தவரையில் இத்தகைய பதவிகளை மையப்படுத்திய அரசியலுக்குள் சிக்குவதற்கு விரும்புகின்றதொரு அமைப்பல்ல.

தமிழ் அரசுக் கட்சிக்குப் பதவிகள், ஆட்சி அதிகாரங்கள்தான் தேவையென்றால் அதனை வைத்திருங்கள். அதில் எமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் இந்தத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள ஆணையின் செய்தியை விளங்கிக்கொள்ள முடியாதுவிட்டால் இதுதான் தமிழ்த் தேசியத்தின் பால் நின்று ஆணைபெற்ற கடைசித் தேர்தலாக அமையும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

தேர்தலுக்கான பரப்புரைக் காலத்தில் நாங்கள் மிகத் தெளிவாகக் கூறியிருந்தோம். தமிழ் அரசுக் கட்சியை வெட்டி, அவர்களை ஒதுக்கி செயற்படுவதல்ல எமது நோக்கம். ஆனால் மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கு அமைவாக கொள்கை ரீதியான உறுதிப்பாட்டுடன் செயற்படவேண்டும். கொள்கையைவிட்டு, ஆட்சி அதிகாரத்தினை மையப்படுத்திச் செயற்பட்டால் தமிழ்த் தேசியம் சார்ந்த ஆணைபெறுகின்ற இறுதி தேர்தலாகவே இருக்கும் என்பது துரதிஷ்டவசமாகும் - என்றார்.

## தமிழீழத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்கிவாய்ந்த அடையாளச் சின்னமாக இந்நினைவகம் எழுந்து நிற்கிறது.

2021ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் தமிழின அழிப்பின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவிடத்தினை இலங்கை அரசு இடித்தழித்ததற்குப் பதிலளிக்கும் விதத்தில், பிரம்டன் மாநாகர சபையில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அங்கு ஓர் இன அழிப்பு நினைவகம் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய நிகழ்வில் கருத்துத் தெரிவித்த ஒன்ராறியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும், ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்ததாவது:

இன அழிப்பின் இறுதிக் கட்டம், நடைபெற்ற இன அழிப்பினை மறுத்து அவற்றுக்கான ஆதாரங்களை அழிப்பதுமாகும். அவ்வகையில், தமிழின அழிப்பின் நினைவுச் சின்னமான முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை 2021 இல் இலங்கை அரசு அழித்ததென்பது, தான் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட இனவழிப்பின் தடயங்களை இல்லாதொழிப்பதின் ஓர் அங்கமாகவே காணப்படுகிறது.

இன்று, தமிழின அழிப்பில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் திறந்து வைக்கப்படும் இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தருணத்தில் நான் மிகுந்த பெருமிதத்துடன் நிற்கிறேன் - என்றார்.

## உள்ளாட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு மீது இருந்த நம்பிக்கை மக்களுக்கு இல்லாமல் போய் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் பெற்ற வாக்குகளைவிட 23இலட்சம் வாக்குகள் இந்தமுறை குறைவடைந்துள்ளது.

எனவே இந்த தேர்தல் பெறுபேறு மூலம் மக்கள் வழங்கிய எச்சரிக்கையை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும். வேறு காரணங்களை தெரிவித்து ஆளும்தரப்பு மக்களின் எச்சரிக்கையை தட்டிக்கழிக்க முற்பட்டால் அதன் பாதிப்பு ஆளும்தரப்புக்கே ஏற்படும். ரணில் விக்ரமசிங்க செயற்படுத்திய மக்களை அழுத்தத்துக்கு ஆளாக்கும் நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையே இந்த ஆளும்தரப்பும் முன்னெடுத்து ச்செல்வதால், ஆளும்தரப்பின் மீது மக்களுக்கு விரக்தி ஏற்பட்டுள்ளது.

அதனால் நாட்டு மக்கள் வழங்கிய எச்சரிக்கையை புரிந்துகொண்டு, அவர்கள் வேகமாக பயணிக்கும் புதிய தாராளவாத வேலைத்திட்டத்தை மாற்றியமைக்க ஆளும்தரப்புக்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது. தீர்மானம் எடுக்கும்போது பொது மக்களின் பால் இருந்து தீர்மானங்களை எடுப்பதற்கு தற்போதும் ஆளும்தரப்புக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## அன்னையத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தையைக் காப்பாற்ற அதன் மீது கவிழ்ந்து கிடக்கும் படத்திற்கு சிறகுகள் வரைந்த படம் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வருகின்றது.

அன்னை அன்பின் வலிமையை உலகுக்கு உணர்த்திய அந்தத் தாய், வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாய், தனது குழந்தையைக் காப்பாற்றும் காட்சி காணொளியாக சமூக ஊடகங்களில் பரவியதால் அநேகர் அந்தத் தாய் மீது அதிகமாகக் கவனம் செலுத்தினர்.

இறம்பொடை – கெரண்டி எல்ல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் துயரச் சம்பவத்தின்போது பலரின் கண்களில் கண்ணீரை வரவழைத்த சம்பவமாக தாய் ஒருவர் தனது குழந்தையைக் காப்பாற்றும் காட்சி.

பஸ்ஸின் இடிபாடுகளுக்கு மத்தியில் போராடிய அந்தத் தாய்க்கு இனி வலிமை இல்லை என்றபோதும் மற்றவர்கள் வந்து தன் குழந்தையைக் காப்பாற்றும் வரை அவர் தன் உயிரைப் பிடித்து வைத்திருந்து அதனைச் சிறு காயம்கூட இன்றிக் காப்பாற்றினார். உயிர்போகும் தருணத்தில்கூட தன்னுடைய குழந்தைக்கு அரவணைப்பையும் பாதுகாப்பையும் வழங்கும் அவளுடைய தாய்மை உலக மக்கள் அனைவரையும் உலுக்கியுள்ளது.

இந்த விபத்தில் காப்பாற்றப்பட்ட அந்த 9 மாதப் பெண் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு அந்தத் தாயும், தந்தையும் இந்த உலகத்தில் இருந்து விடைபெற்றுச்சென்றுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மீனவர்களின் பிரச்சினையை பற்றி விளங்கப்படுத்தத் தேவையில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

மீனவனின் பிள்ளையான எனக்கு மீனவர்களின் பிரச்சினையை பற்றி யாரும் விளங்கப்படுத்த தேவையில்லை என தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சம்மேளனங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர்கள் ஆகிய அமைப்புகள் ,ணைந்து சாய்ந்தமருது மருதூர் சதுக்கத்தில் சனிக்கிழமை மாலை நடத்திய மீன் திருட்டை ஒழிப்பது தொடர்பான ஒன்று கூடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

தமது பிரச்சினைகள் சில தினங்களில் தீராது போனால் மீனவர்கள் வீதிக்கு இறங்கப்போவதாக அறிவித்துள்ளார்கள். அதற்கான சூழ்நிலை உருவாகாது. ஜனாதிபதி, மீன்பிடி அமைச்சர் போன்றோருக்கு இந்த பிரச்சினைகளை விளங்கப்படுத்தித் தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன். மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்க ஆர்ப்பாட்டம் செய்வதை விட அரச தலைவர்களுக்கு பிரச்சினையை புரிய வைப்பதே சிறந்த தீர்வு.

மீனவனின் பிள்ளையான எனக்கு மீனவர்களின் பிரச்சினையை பற்றி யாரும் விளங்கப்படுத்தத் தேவையில்லை. கடந்த காலங்களில் இருந்த அரசியல்வாதிகள் ஒலுவில் துறைமுகம் பற்றியோ, மீனவர்களின் பிரச்சினைகள் பற்றியோ எங்கும் பேசவில்லை. மீனவர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை. நான் பல வருடங்களாக பல்வேறு தரப்பினர்களையும் அணுகி மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க பல்வேறு முயற்சிகளை செய்து கொண்டுதான் இருக்கிறேன்.

பலருடைய குடும்பத்தின் வாழ்வாதாரமான இந்த தொழில் இப்போது கஷ்ட நிலைக்குச் சென்றுள்ளது. அந்த நிலையை நானும் அறிவேன். மீனவர்கள் போராட்டம் செய்து 10-15 நாள்களுக்குள் தீர்வு அடையலாம் என்று எண்ணுகிறார்கள். அது சாத்தியமில்லை. ஆளும்தரப்பு அமையப்பெற்று 06 மாதங்களே கடந்துள்ளன. ஜனாதிபதி, உரிய அமைச்சர்கள், உரிய அதிகாரிகளை கொண்டு விரைவில் தீர்வை பெற்றுத் தருவேன். நாங்கள் ஜே.வி.பியை இங்கு அறிமுகம் செய்தபோது யாரும் எங்களை ஆதரிக்கவில்லை. ஆனால் மீனவர்கள் இம்முறை என்னுடன் சேர்ந்து வெற்றிக்காக உழைத்தார்கள். ஆனபோதிலும் நான் தோல்வி அடைந்தேன். கொள்கைகளை மாற்றி ஜனாதிபதி என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளார். - என்றார்.

இதேவேளை கடலில் நடக்கும் திருட்டை இல்லாதொழிக்க கோரி மருதூர் சதுக்கத்தில் மீனவர்கள் ஒன்று கூடிப் பிரச்சினைக்கு உடனடியான தீர்வுகளை சகல தரப்பினரும் இணைந்து பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களை கடலில் வைத்தே திருடும் கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பணி மந்தகதியில் நடப்பதாகவும் பாதுகாப்பு படையினரும் இந்த ஈனச்செயலுக்கு உடந்தையாக இருப்பதுவும் ஆழ்கடலில் இயற்கையுடன் போராடி அன்றாட வாழ்வாதரத்தை கொண்டு செல்ல மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டை இனியும் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்து அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த மீனவர்கள் இவ்வாறு ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

இதன்போது தேசிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா காரைதீவு பிரதேச சபைக்கு தேசிய மக்கள் சார்பில் தெரிவாகியுள்ள உறுப்பினர் ஏ. பர்ஹான் சாய்ந்தமருது வர்த்தக சங்க தலைவர் எம்.எஸ்.எம். முபாரக் உட்பட மீனவர்கள் பலரும் கலந்து கொண்டு ,ங்கு உரையாற்றினர்.

சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் ,லகுவாக தப்பிவிட முடியாது. இலங்கை கடற்படை, விசேட அதிரடி படை, பொலிஸாரின் கூட்டு முயற்சியில் ,ந்த திருட்டு நடவடிக்கைகளை ஒழிக்க விசேட திட்டத்தை





செயற்படுத்தி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தர உறுதியளிப்பதாக பலரும் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவை நடந்த பாடில்லை. நாடாளுமன்றத்திலும் கடந்த காலங்களில் எங்களின் பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன.

நாங்களும் கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் எனபலரிடமும் பேசியும், கலந்துரையாடியும் எவ்வித ஆக்கபூர்வமான தீர்வும் கிட்டவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி, செட்டிபாளையம், தேத்தாத்தீவு உட்பட அதை அண்டிய பிரதேசங்களிலையே ஆழ்கடல் மீனவர்களின் மீன்கள் திருட்டு போகிறது. 40 (மணிக்கு 40 கிலோமீற்றர்) குதிரை வேகம் கொண்ட சிறியரக மீன்பிடி படகுகளை கொண்டே ,ந்த திருட்டு சம்பவங்கள் நடத்துப்பட்டு வருகின்றன. மீன்களுடன் சேர்த்து மீன்பிடி வலைகளையும் வெட்டி எடுத்து செல்வதால் எங்களுக்கு பலத்த நஷ்டங்களும், கஷ்டங்களும் ஏற்படுகிறது. எங்களின் உயிருக்கும் உத்தரவாதமில்லை. பலத்த அச்சுறுத்தலை நாங்கள் தினம் தினம் எதிர்கொள்கிறோம். - என்றனர்.

எங்களின் குரல் உரியவர்கள் காதுக்கு சென்று எங்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்காது போனால் அடுத்த கட்ட நடவடிக்கையாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்வதுடன் மிகப்பெரிய எதிர்ப்பு நடவடிக்கையையும் தொழிற்சங்க போராட்டத்தையும் முன்னெடுப்போம் என அங்கு தத்தமது கருத்துக்களை முன்வைத்த அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர் சம்மேளனங்கள், மீனவர்கள் தெரிவித்தனர்.

# வவுனியாவில் சிறி சபாரட்ணத்தின் 39ஆவது நினைவு நாள் அனுஸ்டிப்பு



வவுனியாவில் சிறி சபாரட்ணம் அவர்களின் 39 ஆவது நினைவு தினம் சனிக்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை ,யக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிசபாரட்ணம் அவர்களின் 39 ஆவது நினைவு தினம் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை மண்டபத்தில் ,டம்பெற்றது.

,தன்போது சிறிசபாரட்ணம் அவர்களின் படத்திற்கு தீபம் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்தூபி அஞ்சலி செலுத்துப் பட்டது.

நிகழ்வில் கட்சியின்வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுபபினர்செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரன், சிவசக்தி ஆனந்தன், வினோதரராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, முன்னாள் வடமகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் உள்ளிட்ட பலரும், மதகுருமார், கட்சி உயர் பீட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்ன் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொதுப் போக்குவரத்து பாதுகாப்பில் பெரும் கேள்விக்குறி

இறம்பொடையில் நேற்று நடைபெற்ற பேருந்து விபத்தில் 23 பேர் உயிரிழந்த சம்பவம், இலங்கையின் பொது போக்குவரத்து அமைப்பின் சீரழிவையும், அரசின் பொறுப்பில்லாத நிலையும் எடுத்துக்காட்டுகிறது. இந்தச் சம்பவம் தனிப்பட்ட விபத்து அல்ல; இதுபோன்ற உயிரிழப்புகள் நாடெங்கிலும் அன்றாடம் நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதே வருத்தமளிக்கின்றது.

இவ்வாறான விபத்துக்களின் முதன்மை காரணிகளாக, சாரதிகளின் அலட்சியம், போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாமை, ஆட்குறைவான காவல்துறை கண்காணிப்பு, பழுதடைந்த சாலைமைப்புகள், மற்றும் சரியான பராமரிப் பின்றி இயக்கப்படும் வாகனங்கள் எனப் பலவற்றை சுட்டிக்காட்டலாம். குறிப்பாக, சுயாதீனமாக செயல்படும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் தங்கள் வாழ்க்கையாளர்களின் உயிர்களைப் பற்றி கவலைப்படாமல், வேகத்தையும் நேரத்தையும் பணத்தையும் மட்டுமே முக்கியமாகக் கருதி இயங்குகின்றன.

இந்தச் சூழ்நிலையில் அரசின் செயற்திட்டக் கோளாறு மிகவும் கவலையளிக்கிறது. தேசிய போக்குவரத்து ஆணையங்கள், பொதுப் போக்குவரத்து திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்புப் பொறுப்புள்ள அதிகாரிகள் எல்லாம் தங்கள் பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றாததன் விளைவாகவே இத்தகைய விபத்துக்கள் மீண்டும் மீண்டும் நிகழ்கி;றன. ஒரு பயணியின் உயிர் இவ்வளவு மலிவாகிவிட்டதா?

இதற்குத் தீர்வாக ஆளும்தரப்பு விரைந்து கீழ்காணும் முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்:

1. அனைத்து பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கும் கட்டாய உள்துறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2. சாதிகளுக்குப் புதுப்பிக்கப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

3.போக்குவரத்து ஒழுங்குமுறை மீறல்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

4.முக்கிய வீதிகளில் கண்காணிப்பு கமெராக்கள் மற்றும் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் நிறுவப்படவேண்டும்.

5.அரசு மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

இருப்பினும், தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசியல் விருப்பமின்றி, ஒரு சமுகமாக நாம் எதையும் எதிர்பார்க்க முடியாது. இறம்பொடையின் உயிரிழப்புகள் நம் நினைவில் நீடிக்க வேண்டியவை. அவை புனிதக் கோயில்களில் உயிர் நீத்தவர்களின் கதையல்ல நம் அன்றாட வாழ்வின் பகுதியாக மாறியுள்ள தேக்கமடைந்த நிர்வாகத்தின் இரத்த சாட்சியாகும்.

இறம்பொடை விபத்தில் ஒரு தாய் தனது உயிரைப் பணயம் வைத்துத் தனது குழந்தையைக் காப்பாற்றிவிட்டு உயிரிழந்திருப்பது அனைவரையும் உலுக்கி உருக்கியுள்ளது. இத்தகைய சோகங்கள் ஆளும்தரப்பினரின் மனச்சாட்சிகளை உலுக்கவேண்டும். இனியொருபோதும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றாமலிருப்பதை அவர்கள் உறுதிப்படுத்த அவர்களின் மனச்சாட்சிகள் இயங்கவேண்டும்.

இந்த நேரத்தில் அரசும், சமூகமும் விழித்து நிற்க வேண்டும். 'விபத்துக்குப் பின் விழிப்பது' என்ற பழமொழியைச் சமுதாயமாக விட்டு விலகி, 'வருமுன் காப்போம்' என்கிற நமது பாரம்பரியத்தை புதிய நடைமுறையாக மாற்ற வேண்டும்.

# பாகிஸ்தானில் தனிநாடு கோரும் பலுசிஸ்தான் ! இந்திய ஆதரவும், சீனாவிற்கு தலைவலியும் !!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

எங்கள் விடுதலைக்கு உங்கள் உதவி தேவை என இந்தியாவுக்கு கோரிக்கை வைத்துள்ளனர் பலூசிஸ்தான் மக்கள்.

பாகிஸ்தானின் ஆதிக்கம் மற்றும் அதன் ராணுவ கெடுபிடிகளில் இருந்து தங்கள் நிலத்தை விடுவிக்க இந்தியாவின் ஆதரவு தேவை என்று கூறி கோரிக்கைவிடுத்துள்ளனர்.

மேலும் பலூசிஸ்தான் மாகாண மக்கள், தங்களை இந்தியாவுடன் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது புது திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த பலூசிஸ்தான் போராட்ட குழுவை சேர்ந்த 'அட்டா பலோச்' அமைப்பினர் வெளியிட்ட செய்தியில், பலூசிஸ்தான் விடுதலைக்கு இந்தியா குரல் எழுப்ப வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்கு உங்களின் ஆதரவு தேவை என வலியுறுத்தி கோரியுள்ளனர்.

## காஷ்மீர தாக்குதல் எதிரொலி:

தெற்கு காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22/4/25 அன்று நடந்த கொடூர தாக்குதலில் சுமார் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட இந்த கொடிய தாக்குதலுக்கு பாகிஸ்தானை தளமாகக் கொண்ட அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) பொறுப்பேற்றது.

இந்த தாக்குதலை தொடர்ந்து இந்திய-பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நீடித்து வருகிறது. இந்தியா ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்நிலையில் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுவதால், இந்தியா பலூசிஸ்தான் விவகாரத்தில் தலையிட்டு வருகிறது. பலூஸ்தினிய மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் இந்திய அரசு காஸ்மீரிகளின் போராட்டத்தை அடக்கி வைத்துள்ளது.

பலூஸ்தினிய தீவிரவாதிகளுக்கு உதவி செய்யும் இந்திய அரசு, காஸ்மீரிய தீவிரவாதிகளுக்கு உதவிசெய்யும் பாகிஸ்தான் அரசுடன் பல ஆண்டுகளாக பகைமையை நீடித்து வருவதும் அறிந்ததே.

உண்மையில் இந்தியா -பாகிஸ்தான் இரண்டு அரசுகளும் தமது நாடுகளில் தேசிய இனங்களை அடக்கி ஆளும் அரசுகளாகவே இருக்கின்றன ஏனெனில் மக்கள் சுதந்திரத்தை விரும்புகின்றனர். இதனால் தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன என்பதும் மறுக்க முடியாது.




அத்துடன் அரசுகள் மக்கள் மீது போர்களை திணிக்கின்றன. இதனால் புதிய நாடுகள் பிறக்கின்றன என்பதும் யதார்த்தமே. அண்மையில் முதன்முறையாக பாகிஸ்தானின் அரசியல் கட்சியிடமிருந்தே தனி பலூசிஸ்தான் வேண்டும் என்ற கோரிக்கை குறித்து வெளிப்படையான குரல் எழுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அதே வேளை காஷ்மீர் பிரச்னையில் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து




தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதாக பாகிஸ்தானுக்கு மேலாக நீண்ட காலமாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

## இன்னொர் பங்காளதேஷாக மாறுமா ?

தற்போது பலூசிஸ்தான் விவகாரத்தை இந்தியா முக்கிய துரும்புச்சீட்டாக கையிலெடுத்துள்ளது. பலூசிஸ்தானை, இன்னொரு வங்கதேசமாக பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று கோபத்தில் பாகிஸ்தானை கொந்தளிக்க வைத்துள்ளது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள பலூசிஸ்தானில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், அங்கு உரிமைகளுக்காக போராடும் தலைவர்களுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும் இந்திய மத்திய அரசு கூறியுள்ளது.

உண்மையிலேயே பலூசிஸ்தானை இன்னோரு பங்காளதேஷாக உருவாக்க முடியுமா என்றால், அது சாத்தியமில்லை என்றே கூறலாம். பங்காளதேஷ் போன்று, பலூசிஸ்தான் இந்திய எல்லையையொட்டி அமைந்திருக்கவில்லை. அதன் எல்லைப் பகுதிகள் பெரும்பாலும் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரானையொட்டி அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் வழியாக போராட்டத்திற்கான உதவிகளை செய்யலாமே தவிர அது அவ்வளவு எளிதானது அல்ல. ஏனெனில் ஆப்கானிஸ்தானின் எல்லையையொட்டி அமைந்துள்ள இடங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் பலூசிஸ்தானின் பூர்வகுடி பழமைவாதிகள். அவர்கள் இந்தியாவுக்கு ஆதரவான மனநிலை கொண்டவர்கள் அல்ல என்பதும் உண்மையே.

ஆயினும் இன்னொரு பங்காளதேஷாக பலூசிஸ்தான் மாறுமா என இந்தியாவின் எச்சரிக்கையானது காஷ்மீரை பாகிஸ்தான் தூண்டினால்,

நாங்களும் பலூசிஸ்தானை தூண்டி விடுவோம் என்பதை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளது.

## சீனாவிற்கும் தலைவலி ?

காஷ்மீர எல்லையில் பதற்றம் அதிகரித்த நிலையில், பாகிஸ்தானில் பலூச் மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை கண்டு பாகிஸ்தான் இராணுவம் அச்சதில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இது சீனாவிற்கும் தலைவலியை அதிகரித்துள்ளது.

ஏனென்றால், சீனா பலூசிஸ்தானில் இலட்சக்கணக்கான டொலர்களை முதலீடு செய்துள்ளது. இந்த பகுதி சீன புறநகராக மாறி உள்ளது என்றே கூறலாம். இந்த பிராந்தியத்தில் இயற்கை வளங்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# பாகிஸ்தானில்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

நிறைந்திருக்கின்றன. இங்கிருந்து கனிம வளங்களை பிரித்தெடுத்து, பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தை வளமாக்கி வருகின்றனர். இதனால் பலூச் மக்கள் நெடுங்காலமாகவே பாகிஸ்தான் அரசை எதிர்த்து வருகின்றனர்.

அத்துடன் சீனாவிற்கு நிலங்களை தாரை வார்க்கும் பாகிஸ்தான் அரசின் செயலை எதிர்க்கும் பலூசிஸ்தானில் உள்ள மக்களை பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ கடத்தப்படுகின்றனர். பின்னர் அவர்களின் சடலங்கள் தான் கிடைக்கின்றன. பாகிஸ்தான் ராணுவத்தின் இந்த மிருகத்தனமான நடவடிக்கைக்கு உள்ளூர் மக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆயினும் பலூசிஸ்தான் மாகாணத்தில் உள்ள போராளிகள் பாகிஸ்தான் இராணுவத்தை தாக்கி பதிலடி கொடுத்து வருகின்றனர்.

## பலூசிஸ்தான் தனிநாட்டு போராட்டம் :

1947ல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தியாவை பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால் உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூச்சி, பக்தூன் என ஐந்து தேசிய தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971ல் வங்காள தேசமாக மலர்ந்தது.

இராணுவ ஆட்சி, மக்களாட்சி என எதுவாயிருந்தாலும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூச்சிகளையும் பக்துானியர்களையும் (பத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை கோரிப் போராடி வருகின்றன.

பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும் போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் (ஸீஊணசிஸீ) இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அந்நாட்டில் மிகப்பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் அப்பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

## பலூசிஸ்தான் போராட்ட வரலாறு :

பிரிட்டீஷிடம் இருந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11இல் பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதையடுத்து 1947, டிசம்பர் 16இல்0அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாக பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப் பட்டது. ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன.

இந்நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடும்பத்தினரை சிறைவைத்தது. அப்பகுதியின் முழுக் கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது. எனவே 1948-ஆம் ஆண்டு முதல் அப்பகுதி பாகிஸ்தானின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

## மறைமுக இந்திய ஆதரவு :

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியர்கள்தார்மீகஆதரவு செய்வதாகபலூசிஸ்தான் விடுதலை இயக்கமான 'ஹிந்த் பலூச்' எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறுகையில் பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோதிலும், 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீள வலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தியர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடையாளம், கலாசாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரியாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும்புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.




## பலூசிஸ்தான் இனப்படுகொலை :

பலூசிஸ்தான் மக்கள் மீது தொடர்ந்தும் இனப்படுகொலை நடத்தப்பட்டு வருகிறது. இப்பகுதி முழுவதும் பாகிஸ்தான் ராணுவத்தின் அராஜகம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ராணுவத்தால் திடீரென நடத்தப்படும் குண்டுவெடிப்புகளால் நூற்றுக்கணக்கானோர் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், பலூசிஸ்தானில் நடைபெறும் கொடுமைகளை, மக்கள் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் விதமாகவும், அதற்கு எதிரான மற்றும் தனிநாடு போராட்டங்களை தீவிரப்படுத்தி சர்வதேசமெங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர கோஷங்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன.

## சீனாவின் நட்புக்கரம் :

இப்போது பாகிஸ்தானிற்கு பலூச்சிஸ்தான் பிரச்சனை பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள பலூசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாகப் பிரிக்கக் கோரும் இவர்களின் போராட்டத்தை நசுக்குவதில், சீனாவும் நட்புக்கரம் நீட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பலூசிஸ்தானில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கணிப்பில் 37% மக்கள் தனி பலூசிஸ்தான் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஆனால் பலூசிஸ்தானின் மோதல்களைத் தீர்க்க அரசியல் பேச்சுவார்த்தை மட்டுமே ஒரே வழி என்றும், பலூசிஸ்தானின் முக்கிய பிரச்சினைகள் அரசியல் மற்றும் பொருளாதாரம், பரஸ்பர புரிதல், சமரசம் மற்றும் பலூச்சின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



# அரசியல் கைதி இடமாற்றம் குறித்து இன்று தீர்மானம் அறிவிக்கப்படுமாம்

## எதிர்பார்ப்புடன் உள்ளதாக கஜேந்திரகுமார் தெரிவிப்பு

அரசியல் கைதியான கிருபாகரன் திடீரென்று கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் இருந்து அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட விடயம் சம்பந்தமாக திங்கட்கிழமை சிறைச்சாலை திணைக்களத்தின் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்ப்புடன் உள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது -

அரசியல் கைதியாக தொடர்ந்தும் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றவர்களில் ஒருவரான கிருபாகரன் என்பவர் கடந்த ஒக்ரோபர் மாதம் காரணமெதுவுமின்றி கொழும்பு மகசீன் சிறைச் சாலையிலிருந்து அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

6மாதங்களுக்கும் அதிகமாக அம்பாந்தோட்டை சிறைச்சாலையிலே வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான 4 வழக்குகளில் 3 வழக்குகள் கொழும்பில் நடைபெற்றுவரும் நிலையில் அவருடைய சட்டத்தரணி என்னுடன் தொடர்பு கொண்டார்.

அவர் சட்டத்தரணியாக முன்னிலையாகியிருக்கும் தன்னுடைய கட்சிக்காரரான கிருபாகரனுக்கு சரியான வகையில் கடமையாற்ற முடியாதுள்ளதாகவும் கிருபாகரன் அம்பாந்தோட்டை சிறைச்சாலையில் உள்ள நிலையில் அவரை சென்று சந்தித்து அவருடன் கதைக்க முடியாமல் உள்ளதாகவும் என்னிடம் பலமுறை முறைப்பாடு செய்திருந்தார்.

கிருபாகரனுடன் நான் பேசிய போது அவரும் அதேபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அந்தவகையில் - சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உபுல் தெனியவுடன் தொடர்புகொண்டு 6 மாதங்களுக்கு முன்னதாக ,ந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஒழுக்காற்று விடயமாகவே கிருபாகரன் அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், அவருடைய தண்டனைக்காலம் நிறைவடைந்துள்ளதா என்பதை பார்த்து மீண்டும் அவரை கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு கொண்டுவருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆணையாளர் அவ்வாறு கூறி மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில் கிருபாகரனை கொழும்புக்கு கொண்டு வருவதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்விடயம் குறித்து பேசுவதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்புகள் எடுத்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவர் தொடர்புக்கு வருவதைத் தவிர்த்து வந்திருந்தார்.

மேலும் 3 மாதங்கள் கழிந்துள்ள நிலையில் முற்கூட்டிய அறிவித்தல் எதுவுமின்றி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உபுல் தெனியவை சந்திப்பதற்கு முயற்சித்திருந்தேன். ஆனால் அவர் வேறு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாக தெரிவித்து என்னை சந்திப்பதைத் தவிர்த்திருந்தார்.

பின்னர் சிறைச்சாலை அதிகாரி திஸநாயக்க என்பவரை சந்தித்திருந்தேன். சந்தித்து விடயங்களை தெரிவித்தபோது அரசியல் கைதியான கிருபாகரனின் தண்டனை விடயங்கள் தொடர்பாக தனக்கு எதுவுமே தெரிவித்திருக்கவில்லை என்று குறிப்பிட்டதுடன், அவர் தொடர்பான கோப்புக்களை பார்த்து புலனாய்வு பிரிவால், வந்திருக்கும், அறிக்கையின் அடிப்படையில்தான் அவர் அம்பாந்தோட்டை சிறைக்கு மாற்றப்பட்டிருந்ததாகவும், ஆனால் அந்த அறிக்கை தற்போது தன்னிடம் ,ல்லை என்றும் குறிப்பிட்டார்.

கிருபாகரன் ஏன் ஈடமாற்றம் செய்யப்பட்டார்? என்பது குறித்து கிருபாகரனுக்கோ அல்லது அவரது சட்டத்தரணிக்கோ தெரிவித்திருக்கவில்லை.

நீதிமன்றத்துக்கும் அறிவிக்கவில்லை. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உபுல்தெனிய தண்டனை இடமாற்றம் என்று எனக்கு 6 மாதங்களுக்கு முன்னர் சொல்லியிருந்தார்.

ஆனால் 3 மாதங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையில் அவரை வேறொரு சிறைச்சாலையில் வைத்திருப்பது வழமையான விதிமுறைகளை மீறுவதாகவே இருக்கின்றது.

ஆகவே இந்த விடயத்தைக் கருத்தில்கொண்டு அவரைமீளவும்கொழும்புமகசீன்சிறைச்சாலைக்கு மீண்டும் கொண்டுவருமாறு கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில், ,வ்விடயம் குறித்து ஆராய்ந்து திங்கட்கிழமை எனக்கு தெரியப்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. - என்றார்.



# தேசிய ஆக்கத்திறன் விருது விழாவும் பரிசளிப்பும்

(சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாவையொட்டிய இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது மாவட்ட மட்ட பரிசளிப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக துறவற நூற்றாண்டையொட்டிய சுவாமி விபுலானந்த அடிகள் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுகளுக்கு திருமுன்னிலை அதிதியாக மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்இ

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம அவர்களும்இ கௌரவ அதிதியாக மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் இசிறப்பு அதிதியாக அம்பாறை மாவட்ட சகல பிரதேச செயலாளர்கள்இ பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள்இ கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

300 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.






# மாணவி அம்ஷிகாவிற்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம்

## மட்டக்களப்பில் நேற்று

மட்டக்களப்பு காந்திப்பூங்கா வளாகத்தில் என் மௌனம் என் குற்றமல்ல. உன் செயல் தான் குற்றம் - மௌனத்தைக் கலைப்போம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, உயிரிழந்த அம்ஷிகாவிற்கு நீதிகோரிய ஆர்ப்பாட்டமொன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது அம்ஷிகாவின் ஆத்மசாந்திவேண்டியும் அவருக்கு நீதிவேண்டியும் கலந்து கொண்டோர் கறுப்புப் பட்டியணிந்து, மெழுகுவர்த்தியேந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது 'பரிதாபம் வேண்டாம். பாதுகாப்பு வேண்டும்', 'ஒன்றாய் எழுந்தால் சீண்டல் அழியும்', 'தண்டனை இல்லையெனில் குற்றமும் தொடரும்', 'தண்டனை இல்லையென்பதே குற்றவாளியின் தைரியம்','என் உடலை உன் உரிமையென எண்ணாதே', 'அரசின் மௌனம் சீண்டலுக்கான அனுமதிப் பத்திரம்' போன்ற பதாதைகளை ஏந்தியும்,கோசங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கையளிப்பதற்கான மகஜரும் வாசிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அம்ஷிகாவிற்கு ஏற்பட்ட நிலைமை இன்னுமொரு மாணவிக்கு ஏற்படுவதற்கு முன்னர் இவ்வாறான செயற்பாடுகளுக்கான சட்ட நடவடிக்கைகள் கடுமையானதாக ஆக்கப்படவேண்டும் எனவும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.






# மன்னாரில் காட்டு யானைகளால் பல தென்னை மரங்கள் நாசம்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்புக் கடந்தான் கிராமத்தில் சனிக்கிழமை இரவு புகுந்த காட்டு யானைக் கூட்டம் பல தென்னை மரங்களை நாசமாக்கின.

தொடர்ச்சியாக இக் கிராமத்தில் பல பகுதிகளில் இவ்வாறான காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாகவும் தாங்கள் வாழ்வாதாரமாக செய்து வருகின்ற இத் தோட்ட செய்கையை அளிப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

காட்டு யானைகளினால் தொடர்ச்சியாக இவ்வாறான நிலை ஏற்படுமாயின் இக்கிராமத்தில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் தான் தோளில் சுமந்து நீர் ஊற்றி வளர்க்கப்பட்ட தென்னைகள் எனவும் தற்போது அவை பலனை தந்து கொண்டிருந்த போது அவற்றை அழித்துள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனை கருத்தில் கொண்டு பரப்புக் கடந்தான் கிராமத்திற்கு ஒரு யானை வேலி அமைத்து தருமாறு மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ணய முறைமை சிறந்த முறையில் தயாரிக்கப்படவேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

மின்சார சபையால் முன்வைக்கப்படும் மின்கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆராய்ந்ததன் பின்னர், மின் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் தமது யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு காலவகாசம் வழங்கப்படும்.

## ரூ. 10 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதவிர, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை மற்றும் காப்புறுதி நிதியத்தின மூலம் இழப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## கொத்மலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருணாகலிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளானது.

காயமடைந்த 59 பேர் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் இவர்களில் கவலைக்கிடமான நிலையிலுள்ள 22 பேர் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் நேற்றிரவு வரை தொடர்ந்தது. கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் மீட்புப்பணிகள் தொடர்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைக்காக விசேட விசாரணைக்குழு கெரண்டியல்ல பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. இந்நிலையில் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் டொக்டர் பிரசன்ன குணசேன சென்று பார்வையிட்டார்.

இதேவேளை, விபத்தில் படுகாயமடைந்தவர்களை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அழைத்து வர இரண்டு ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில், இரத்மலானை விமானப்படை தளத்தில் இந்த இரண்டு ஹெலிகொப்டர்களையும் விமானப்படை தயார் நிலையில் வைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நடவடிக்கை இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு பெல் 412 ரக ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய கலந்துரையாடலை ஆதரிப்பதாகவும், தற்போதைய காலத்தில் பிராந்திய அமைதியை அடைவதற்குத் தேவையான எந்தவொரு பங்களிப்பையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார்.

## மின் கட்டண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மீளாய்வுக்கு முன் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி நிபந்தனைகளை நிறைவேற்றும் நடவடிக்கையில் ஆளும்தரப்பு ஈடுபட்டுள்ளது என்பது இப்போது தெளிவாகிறது.

கடந்த ஆண்டு லாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை பெப்ரவரி மாதம் முதல் நட்டமடைந்து வருவதாகவும், அது எண்ணிக்கையில் ரூபாய் 271.1 பில்லியன் அளவிற்கு இருப்பதாகவும் கூறி, அன்று மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் கைவிட தயாராகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ரூபா 9,000 மின்சாரக் கட்டணத்தை ரூபா 6,000 வரையும், ரூபாய் 3,000 மின்சாரக் கட்டணத்தை ரூபாய் 2,000 வரையும் 33 சதவீத குறைப்பதாக தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, இவ்வாறு நாட்டு மக்களை துன்பத்திற்கு உள்ளாக்குவது ஜனநாயக விரோத செயல் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இதற்கு முன்னரும் தற்போதைய மின்சக்தி அமைச்சர் உட்பட ஆளும்தரப்பு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது என அறிவித்தபோதும், எதிர்க்கட்சியாக நாங்களும், மின்சார நுகர்வோர் அமைப்புகளும் எழுப்பிய குரலுக்கு பதிலளித்து, பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஜனவரி மாதத்தில் 20 சதவீத மின்சாரக் கட்டணத்தைக் குறைத்ததையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதன்படி, இம்முறையும் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளோம் என வலியுறுத்துகிறேன் என்றார்.

# தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்க ஜனநாயக்கக் கூட்டணி ஆதரவு

## புளொட் தலைவர் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ள சபைகளில் அந்தக் கட்சி ஆட்சியமைப்பதற்கு, ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் புளொட் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அதேபோன்று தமிழரசுக் கட்சியும், சில சபைகளை விட்டுக்கொடுத்து ஏனைய தமிழ் கட்சிகள் ஆட்சியமைப்பதற்குரிய வழிவகைகள் தொடர்பில் ஆராய்வதாக சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்களுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் கந்தரோடையில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் இல்லத்தில் இன்று காலை குறித்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், மு.சந்திரகுமார் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த சந்திப்பையடுத்தே தர்மலிங்கம் சித்தார்த்தன் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளே இங்குள்ள ஒவ்வொரு சபைகளிலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவேண்டும் என்பதில் எல்லோரும் ஒரே நிலைப்பாட்டோடு இருந்தனர்.

அதிலும் தமிழர் பிரதேசங்களில் தமிழ்க் கட்சியொன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இருந்தனர்.

இதற்கமைய தமிழ் அரசுக் கட்சி பல இடங்களிலும் முன்னிலையில் இருந்தாலும் வேறு தமிழக் கட்சிகள் முன்னிலையில் இருந்தாலும் தமிழ்த் தேசியத் தரப்பு என்ற அடிப்படையில் இவர்கள் ஆட்சி அமைக்கலாம். அதேபோன்று நாங்களும் முன்னிலையில் இருக்கும் இடங்களில் அதே விட்டுக்கொடுப்புடன் நாங்களும் ஆட்சி அமைப்போம்.

ஆக தமிழரசுக் கட்சி தான் வடக்கு கிழக்கில் பல இடங்களிலும் முன்னிலையில் இருப்பதாலும் தமிழ்க்கட்சியொன்று ஆட்சியமைக்கவேண்டும் என்பதாலும் நாங்கள் எங்கள் ஆதரவை வழங்குவோம்.

இதேபோன்றே தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஒரு சில இடங்களில் முன்னிலையில் இருப்பதால் அந்த சபைகளில் அவர்களும் ஆட்சி அமைக்கலாம். அவர்களும் எம்முடன் பேசி இருக்கிறார்கள். அவர்களுடன் தொடர்ந்தும் பேச்சு நடைபெற்று வருகிறது.

இதேவேளை ஜே.வி.பியும் ஒரு சில இடங்களில் ஆட்சி அமைக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் அவர்கள் ஆட்சியை பிடிக்காத வகையில் தமிழர் தரப்பாக நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ்க் கட்சிகளே அங்கும் ஆட்சியமைப்பதை உறுதி செய்ய வேண்டும் - என்றார்.

# மாணவி டில்ஷி அம்ஷிகாவின் இறப்பிற்கு நீதிகோரி தலவாக்கலையில் கவனவீர்ப்பு



(கேதீஸ்)

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்துக்குநீதிக்கோரியும்பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும்தலவாக்கலையில்நேற்று மாலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

தலவாக்கலை தோட்ட பெற்றோர்கள்,மாணவர்கள், சிவில் அமைப்புக்கள், மற்றும் பெண்கள் இணைந்து இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருத்தன.

நேற்று மாலை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கவனவீர்ப்பு ஆர்ப் பாட்டமானது ஊர்வலமாக தலவாக்கலை ட்றூப் வீதி வழியாக தலவாக்கலை பஸ் நிலையத்தை வந்தடைந்தது. அங்கு ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களைஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




அரசாங்கம் பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும், உயிரிழந்த மாணவி டில்ஷி அம்ஷிகா தனது உயிரை மாய்த்துக்கொள்வதற்கு காரணமாக இருந்த அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும், மாணவியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர். இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது சிவில் சமூக பிரதிநிதிகள், பெண் சமூக செயற்பாட்டாளர்கள், சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# இவ்வருடம் ஹஜ் செல்வோருக்கு ஹிஸ்புல்லா எம.பி. வாழ்த்து.

இவ்வருடம் அல்லாஹ்வின் பேரருளால், அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று, இப்புனித கடமையை நிறைவேற்ற பயணமாகும் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பிரார்த்தனையும் தெரிவித்துக்கொள்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள விஷேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் தொடர்த்து குறிப்பிடுகையில் -

ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்து கடைபிடிக்கவேண்டிய கடமைகளில் ஒன்றாகும். உடல் மற்றும் பொருளாதார நீதியாக தயாராக ஒவ்வொரு முஸ்லீமும் வாழ்நாளில் ஒருமுறையாவது இப்புனித கடமையை நிறைவேற்ற வேண்டும். அந்த சந்தர்ப்பத்தை இறைவன் உங்களுக்கு நாடியிருக்கிறான்.

'லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்' - உங்கள் இதயத்திலிருந்து வரும் இந்த அழைப்பை அல்லாஹ் அவனது அன்பினால் ஏற்கட்டும்.



உங்கள் ஒவ்வொரு தவாஃபையும், ஒவ்வொரு துஆவினையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ளட்டும். உங்கள் அனைத்து நற்காரியங்களும் ஏற்றுக்கொள்ளப்படட்டும்.

அல்லாஹ் தனது அருளாலும் இரக்கத்தாலும் உங்களை தேர்தெடுத்து, தம் இல்லத்திற்கு அழைத்து புனித ஹஜ் கடமையினை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை உங்களுக்கு அளித்திருக்கிறான்.

இப்புனிதபயணத்தில் எம்மையும் உங்கள் துஆக்களில் சேர்த்துக்கொள்ளுங்கள் - என குறிப்பிட்டுள்ளார்.

# தெடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதி பளை பகுதியில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

யாழில் இருந்து காலை 6.30 மணியளவில் கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதம் 07.30 மணியளவில் பளை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதி தள்ளியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார்.

அருளானந்தம்பிரபாகரன் (வயது - 43) உடைய குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.



மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். 316




# சுற்றுச் சூழல் அபிவிருத்தி மிகவும் சவாலான விடயம்

## யாழ். மாவட்ட பதில் செயலாளர் அதிபர் கருத்து

சுற்றுச்சூழல் அபிவிருத்தி என்பது மிகவும் சவாலான விடயம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலாளர் பிரதீபன் தெரிவித்தார்.

இலங்கையின் கொள்கை ஒத்திசைவு மற்றும் சீர்திருத்தத்துக்கான பங்குதாரர் கலந்துரையாடலானது வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, தலைமையுரையாற்றிய பதில், அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் கடந்த 25 வருடங்களாக தேசிய மற்றும் சர்வதேச கொள்கை சீர்திருத்த வழிமுறைகளுக்கு பங்களித்துவரும் ஒரு நிறுவனம்.

இந்த நிறுவனமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து இலங்கையின் தற்போதைய கொள்கைப் போக்குகள், இடைவெளிகளை அடையாளங்கண்டு ஒருங்கிணைந்த முறைமைப்படுத்தப்பட்ட கொள்கைச் சீர்திருத்தச் செயல்பாடுகளை மீள் வடிவமைப்புக்கு பங்களிக்கும் வகையில் தொடர்புடைய பங்குதாரர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

மேலும், சுற்றுச்சூழல் அபிவிருத்தி என்பது சவாலான விடயம் எனவும், அனைவரும் ஒன்றிணைந்து தமது புலமைகளை இக் கலந்துரையாடலில் முன்வைத்து கொள்கை வகுப்பாளர்களுக்கு அனுசரணையாக செயல்பட வேண்டும் .

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனனும், இணைப்பாளராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவிலங்கியல் துறை பேராசிரியர் கே. கஜபதியும் பங்குபற்றியதுடன், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர், பிரதிப் புள்ளிவிவர பணிப்பாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்புடை திணைக்கங்களின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார இரங்கல்

நுவரெலியா - கம்பளை பிரதான வீதியின் கொத்மலை, கெரண்டி எல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தனது இரங்கலைத் தெரிவித்து விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நுவரெலியா - கம்பளை பிரதான வீதியின் கொத்மலை, கெரண்டி எல்ல பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற பஸ் விபத்து பற்றிய செய்தியைக் கேட்டு நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

நாட்டில் தினமும் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கான நிரந்தரதிட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் தற்போது மும்முரமாக செயல்பட்டு வருகிறது.

தற்போதுள்ள சட்டங்களை செயல்படுத்துவதன் மூலமும், சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துகளை கணிசமாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை நடந்த இந்த கொடூரமான வீதி விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையபிரார்த்திக்கிறேன்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க சகல தொடர்புடைய மருத்துவமனைகளையும் தயார்ப்படுத்தவும், இது தொடர்பாக தேவையான அனைத்து எதிர்கால நடவடிக்கைகளையும் எடுக்கவும் பாதுகாப்புப்படையினருக்கும் சுகாதாரத் துறைகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# மேயர் பதவியை நான் என்றைக்கும் கோரவில்லை; வழங்கினால் முன்மாதியாக நடத்திக் காட்டுவேன்

## மாநகரசபை உறுப்பினர் காண்டீபன் தெரிவிப்பு



வவுனியா மாநகரசபை மேயர் பதவியை நான் கோரவில்லை. ஜனநாயக முறைப்படி எனக்கு வழங்கினால் முன்மாதிரியாக நடத்திக் காட்டுவேன் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வவுனியா நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் சு.காணடீபன் மாநகர மேயர் பதவியை கோருவதாக வெளியான செய்தி தொடர்பில் நேற்று கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாநகர சபையின் முதலாம் வட்டாரத்தில் போட்டியிட்ட நான் அதி கூடிய வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளேன். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் அதி கூடிய வாக்குகளைப் பெற்று வீட்டு சின்னத்தில் வெற்றி பெற்று நகரசபை உறுப்பினராக எனது வட்டாரத்தில் நான் ஆற்றிய பணிக்கான அங்கீகாரமாக மீண்டும் அதி கூடிய வாக்குகளால் சங்கு சின்னத்தில் வெற்றி பெற்றேன்.

தேர்தல் முடிந்த பினபே மேயர், பிரதி மேயர் யார் என தீர்மானிப்பதாக கட்சி தலைவர்கள் மத்தியில் பேசப்பட்டு இருந்தது. அந்தவகையில், அதி கூடிய வாக்குளைப் பெற்று நான் வென்ற நிலையில் என்னை பிரதிநிதித்துவப்படுத்தும் புளொட் அமைப்பும், எனது ஆதரவாளர்களும் எனக்கு மேயர் பதவி வழங்க வேண்டும் எனக் கோருகின்றனர். நான் கோரவில்லை.

ஜனநாயக முறைப்படி எனக்கு மேயர் பதவி தந்தால் நான் அனைத்து உறுப்பினர்களையும் அரவணைத்து இந்த மாநகரத்தை முன்மாதிரியாக நடத்திக் காட்டுவேன். அடுத்த முறையும் சங்கு சின்னத்தில் அதி கூடிய வாக்குளைப் பெற்று வெல்லும் நிலையை உருவாக்குவேன். மக்களின் விருப்பதிற்கு கட்சி தலைமைகள் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். 100

# மன்னாரில் பனை சார் உற்பத்திப் பயிற்சி!

(சுபேசன்)

ஐ.நா அபிவிருத்தித் திட்ட நிதி உதவியில் மாத்தறையைச் சேர்ந்த சுபகாந்தா நிறுவனத்தால் மன்னாரில் பனை சார் உற்பத்திப் பயிற்சிநெறி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியினை பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் மற்றும் மன்னார் நகர் பிரதேசசெயலர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்திருந்தனர்.

மேலும் சுபகாந்தா நிறுவன பணிப்பாளர்,மன்னார் மாவட்ட பனை அபிவிருத்திச்சபை முகாமையாளர் மற்றும் பனை அபிவிருத்திச்சபையின் போதனாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்ட பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்;-

இவ்வாறான பயிற்சிநெறிகள் பனை சார்ந்த தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த உதவும்.

பனைசார் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதிகள் அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறான பயிற்சிகள் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு சிறந்ததொரு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும்.

பனை சார்ந்த உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வேளையில்இவ்வாறானஊக்குவிப்புத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து சிறந்த பனைசார் உற்பத்திகள் கிடைக்கின்றன.



காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத தடைச் சட்டத்தை தடை செய்வேன் என்று கூறியவர் அதற்கு ஏற்பாடு செய்யவில்லை!

## தம்பிராசா செல்வராணி தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்(

எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி முதல் மே மாதம் 18ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரமாகும். அதாவது முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமானது எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 18ஆம் திகதி வரை வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அனைத்து பொதுமக்களும் இந்நிகழ்வினை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும் என வடக்கு கிழக்கு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியுமாகிய தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது –

எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி முதல் மே மாதம் 18ஆம் தேதி வரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரமாகும். அதாவது முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமானது எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 18ஆம் திகதி வரை வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அனைத்து பொதுமக்களும் இந்நிகழ்வினை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும்.

இந்நிகழ்வானது கடந்த 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்று முடிந்த போர் காரணமாக ஓர் இனம் அழிந்த ஒரு கதையாகவும் இரத்த ஆறு ஓடிய நாளாகவும் எங்களது உறவுகள் இந்த மாதம் 12ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை எங்கள் உறவுகள் குடும்பம் குடும்பமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நாளாக அனுஸ்டிகும் ஒரு முக்கியமான நாளாகும். ஓர் இடவழிப்பு வாரமாக வடக்கு கிழக்கில் அனுஷ்டிக்கப்பட இருக்கின்ற இந்த வாரத்தில் 16 வருட காலமாக வலிகளை சுமந்து எங்களது உறவுகளுக்கான நீதி கிடைக்காமல் இன்று வரை நாங்கள் வீதிகளில் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்களுக்கான உரிய நீதி கிடைக்கும் வரை இந்த போராட்டத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று நீதியை பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல உண்மையில் அந்த முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை அரசு அங்கு போர் நடந்து கொண்டிருக்கும் போது பொருளாதார தடையை விதித்து ஓர் உணவு கூட அப்பகுதிக்கு எடுத்து செல்ல முடியாத காலகட்டத்தில் அங்கு பட்டினி சாவு ஏற்பட்டது. ஆனால் எமது உறவுகள் உப்பில்லாத அரிசிகளை உபயோகித்து நீரை ஊற்றி அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக கஞ்சி தயாரித்தது. அது தான் அந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும். அன்று முள்ளிவாய்க்காலில் அக்கஞ்சிக்கு வரிசையில் நின்று கொண்டிருக்கின்ற வேளையில் எத்தனையோ செல் தாக்குதல்கள் விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் கஞ்சி சிரட்டையுடன் உறவுகள் அவ்விடத்தில் மரணம் அடைந்தார்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் இவ்வாறான வலி தெரியும் எனவும் தனது தாயும் பிள்ளையை தொலைத்து விட்டு கண்ணீர் வடித்த காலமாகும் எனக் கூறி இன்று ஆட்சிக்கு வந்திருந்தார். ஆனால் இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம் என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஆனால் அன்று ஒரு நாள் பயங்கரவாத தடைச் சட்டத்தை தடை செய்வேன் அல்லது இல்லாமல் செய்வேன் என்று கூறியவர் இன்று அவர் ஆட்சியில் வந்தும் அதற்கான எந்த ஓர் ஏற்பாடுகளையும் செய்யவில்லை. இன்று அவர் நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டு இங்கு உள்ள எமது இளைஞர்களையும் இங்குள்ள தமிழ் மக்களையும் நல்லாட்சி என்ற போர்வையில் இவ்வாறான சட்டங்களை வைத்து கைது செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இன்று இந்த அநுர அரசு பற்றியும் எமக்கு எவ்வாறான தீர்வுகளை தருவார்கள் என்றும் எமது இளைஞர்களுக்கு இதுவரை தெரியாது.

ஆனால் எங்களுக்கு அவர் குறித்து தெரியும் .கடந்த காலங்களில் எத்தனை ஜனாதிபதிகளை நாங்கள் கடந்து வந்திருக்கின்றோம். எத்தனை அரசாங்கங்களைக் கடந்து வந்திருக்கின்றோம் .ஆனால் எங்களுக்கு எந்த விதமான ஒரு பதிலும் கிடைக்கவில்லை. எமக்கு எந்தவிதமான ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அதன் பிற்பாடு தான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம் .அது மட்டுமல்ல மீண்டும் ஓ. எம். பி. ஐ எங்களிடம் முன் வைக்கிறார்கள்.

இந்த உள்ளக பொறிமுறை வேண்டாம் எனக் கூறியும் இவ்வாறு



அவர்கள் செயற்படுகின்றார்கள். நாங்கள் இன்று சர்வதேச பொறிமுறையை நாடி இருக்கின்றோம். ஆகவே எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி முதல் மே 18 ஆந் திகதி வரை உணர்வு பூர்வமாக இன அழிப்பு வாரத்தினை அனுஸ்டிக்க முடியும்.

இந்த முள்ளிவாய்க்காலில் எங்களுக்கு நடந்த அவலம் காரணமாக எமது இனமான தமிழினம் அழிவினை சந்தித்திருக்கின்றது. ஒரு தமிழ் இனமே அங்கு அழிந்திருக்கின்றது .எனவே இந்த வாரத்தை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள மதகுருமார்கள் ஓட்டோ சங்கத்தினர் பல்கலைக்கழக மாணவர்கள் ஊடகவியலாளர்கள் இளைஞர் ஒன்றியங்கள் விளையாட்டு கழகங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பொதுமக்கள், அரசியல்வாதிகள் என அனைவரையும் நாங்கள் அழைக்கின்றோம்.

இத்தினத்தில் இவ்வாறு அஞ்சலி செலுத்துவது ஊடாக முள்ளிவாய்க்காலில் தொலைந்த தீர்வினை நாங்கள் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். ஆகவே அனைவரும் ஒன்று திரண்டு இந்த முள்ளிவாய்க்கால் தினத்தில் அஞ்சலி செய்து எங்களுக்கான தீர்வினை பெற்று தரமுன் வர வேண்டும் என்று கூறி இருக்கின்றேன். – என்றார்.

சிவில் சமூக செயற்பாட்டாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகருமான தாமோதரம் பிரதிபனும் இச்செய்தியாளர் சந்திப்பில் உடனிருந்தார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2025இல் வெளியிடப்பெற்றது